පේෂ කර්මාන්ත දෙපාර්තමේන්තුව

**புடவைக் கைத்தொழில் திணைக்களம்**

# DEPARTMENT OF TEXTILE INDUSTRY

වැය ශීර්ෂ අංක: 303

**செலவினத் தலைப்ப இலக்கம்: 303**

**Expenditure Head No: 303**

3 වන මහල, මහලේකම් කාර්යාල ගොඩනැගිල්ල, මාලිගාවත්ත, කොළඹ 10

**3ஆம் மாடி,செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10**

**3rd Floor, Secretariat Building, Maligawatta, Colombo 10**

## புடவைக் கைத்தொழில் திணைக்களம்

## அத்தியாயம் 01: நிறுவனத் தோற்றப்பாடு

### அறிமுகம் 1.1

இலங்கையின் புடவைக் கைத்தொழில் துறையானது, ஏனைய பெரும்பாலான தொழில்துறைகளைப் போன்று ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், அனைத்து மாகாணங்களிலும் பரந்து விரிந்துள்ள ஒரு தொழில்துறையாகும். அதேபோன்று, கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையானது இதன் கீழ் உள்ள ஒரு துறையாக அடையாளம் காணப்படக் கூடியதுடன், பாரம்பரிய நெசவு முறைகள், தனித்துவமான வடிவங்கள், கோலங்கள் போன்றவற்றால் வளம் பெற்றதொன்றாகும். தற்காலத்தில் 15,000 இற்கும் மேற்பட்டோர் இத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளதுடன், இதன் மூலம் ஈட்டப்படும் நேரடி மற்றும் மறைமுகப் பொருளாதார நன்மைகளும் ஏராளமாகும்.

பெரும்பாலும் கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள இத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாவர் என்பதுடன், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில்முயற்சி ஊக்குவிப்பு ஆகியவற்றின் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக முதன்மையான பங்களிப்பை வழங்கும் ஒரு பிரிவாக இது காணப்படுகின்றது. தனியார் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களங்களின் கீழ் உள்ள நெசவு நிலையங்கள் மூலம் துணிகள் உள்ளிட்ட பல்வேறு கைத்தறிப் புடவைக் கைத்தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன், விற்பனை நிலையங்கள் மூலம் அவ்வுற்பத்திகளின் விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது.

புடவைக் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய பாரம்பரியத் தொழில்நுட்ப அறிவைப் போன்றே, தொழில்சார் பயிற்சிப் பாடநெறிகளும் பயிற்சி நிறுவனங்களும் இந்நாட்டில் காணப்படுவதுடன், துணிகள்/ஆடைவடிவமைப்புத் துறைகளுடன் தொடர்புடைய பட்டப்படிப்புப் பாடநெறிகளும் உள்ளன.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையானது, சூழல்நேய உற்பத்திப் பொருட்களாகவும் இந்நாட்டிற்கே உரித்தான ஆடைவடிவமைப்புக் கோலங்களை உள்ளடக்கிய உள்நாட்டுப் பெறுமதிமிக்க உற்பத்திப் பொருட்களாகவும் சுற்றுலாத்துறை மற்றும் ஆடைவடிவமைப்புத் துறையுடன் மாத்திரமன்றி, உயர் பெறுமதியைக் கொண்ட உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுடனும் (niche &

premium markets) வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்படக்கூடியதொன்றாகும். அத்துடன், கொத்தணி அடிப்படையிலான (cluster based) உற்பத்தியை வலுப்படுத்துதல், உற்பத்தித் திட்டமிடல் மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துதல், தேசிய மட்டத்திலான வர்த்தகப் நாமக்குறியீடு (branding) மற்றும் ஒருங்கிணைப்பு ஊடாக சந்தைப் பிரவேசத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இத்துறைக்கு பரந்த துணிகள் மற்றும் ஆடைப் பெறுமதிச் சங்கிலியுடன் மிகச் சிறந்த முறையில் இணைய முடியும்.

இவ் அணுகுமுறையானது கிராமிய வருமானத்தை அதிகரிப்பதற்கும், பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்கும், தொழில்முயற்சி ஊக்குவிப்பிற்கும் மற்றும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலுக்கும் ஆதரவளிப்பதுடன், இந்நாட்டின் தனித்துவமான கலாசார அடையாளத்தையும் பாதுகாக்கிறது.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் இத்துறைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, இந்நாட்டின் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காகப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல், உற்பத்திப் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்திக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை இத்துறைக்கு அறிமுகப்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாடுகளை அறிமுகப்படுத்துதல், பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல், சந்தை ஒருங்கிணைப்பு, தொழில்முயற்சி ஊக்குவிப்பு போன்ற பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களின் மூலமாகவும், பிரதேச செயலகங்களை ஒருங்கிணைத்துக்கொண்டும் 2025 ஆம் ஆண்டில் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் அபிவிருத்திக்காக, புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.2 நிறுவனத்தின் நோக்கு, இலட்சியப் பணி, குறிக்கோள்கள்

**நோக்கு**

“உள்நாட்டுத் தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை வெற்றிகொள்ளக்கூடிய வகையிலும் கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஆக்கபூர்வமானதும் போட்டித்தன்மைமிக்கதுமான துணி உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.”

**லட்சியப் பணி**

“அரச கொள்கைச் சட்டகத்தினுள் கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல், தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கத்தினூடாக கைத்தறி நெசவத்தொழில் துறையில் அளவுசார் மற்றும் தரம்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.”

## நோக்கங்கள்

கைத்தறி நெசவுத் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக உரிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் மூலோபாய திட்டமிடல்.

கொள்கைகளை அமுல்படுத்துதல், இணைப்பாக்கம் செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆற்றல் விருத்தி மற்றும் திறன் விருத்தி.

கைத்தறி நெசவுத் தொழில் துறையின் அபிவிருத்திக்காக தேவைப்படுகின்ற பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல்

துறைக்கான புதிய ஊழியர்களை பயிற்றுவித்தல்

துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் வசதிகளை வழங்குதல்

சந்தையை விரிவுபடுத்துதல் மற்றும் கைத்தறி நெசவு உற்பத்திகளை ஊக்குவித்தல்.

நெசவுத் தொழில் துறையின் ஒருங்கிணைந்த அபிவிருத்திக்கான நிறுவன இணைப்பாக்கம்

கைத்தறி நெசவுத் தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.

கைத்தறி நெசவுத் தொழில் துறைக்கான கலாசார மரபுரிமைகள் மற்றும் மரபுரீதியான அறிவினைபாதுகாத்தல்.

## 1.3 பிரதான பணிகள்

### 1.3.1 கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்கான ஆலோசகர்களையும் புதிய கைவினைஞர்களையும் பயிற்றுவித்தல்.

**புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்குப் பயிலுநர்களை ஆட்சேர்த்து பயிற்றுவித்தல்.**

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 14 புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஊடாக நடாத்தப்படும் புடவைக் கைத்தொழில் கலை பற்றிய ஆறு மாத கால ஆரம்பப் பயிற்சிப் பாடநெறி மற்றும் 13 மாத கால இறுதிச் சான்றிதழ்ப் பாடநெறி ஆகியவற்றின் மூலம் உரிய பயிற்சி வழங்கப்படுகின்றது. இந்த முழுநேரப் பாடநெறிகள் மூலம் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களில் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் பற்றிய விரிவான கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் கைத்தறிகளைப் பயன்படுத்தி துணி உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப அறிவு கொண்ட பயிலுநர்கள் உருவாக்கப்படுவதுடன், கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்காக மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துகின்ற ஒரேயொரு நிறுவனம் புடவைக் கைத்தொழில் திணைக்களம் மாத்திரமேயாகும்.

அதற்கமைய, 2025/2026 ஆம் கல்வி ஆண்டிற்காக 110 பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. தகைமைபெற்ற 96 பயிலுநர்களுக்காக 2025 பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதியன்று இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

### 1.3.2 கைத்தறிப் புடவைக் கைத்தொழில் பரீட்சைகளை நடாத்துதல்

**புடவைக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான பரீட்சை நடவடிக்கைகள்**

2024/2025 ஆம் ஆண்டிற்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுநர்களின் புடவைக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழ் மற்றும் ஆரம்பப் பயிற்சிப் பாடநெறிகளுக்குரிய பரீட்சையானது 2025 பெப்ரவரி மாதம் 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

**கைத்தறிப் புடவைக் கைத்தொழில் வடிவமைப்புப் பயிற்சிப் பாடநெறி தொடர்பான பரீட்சை நடவடிக்கைகள்**

வடிவமைப்புப் பயிற்சிப் பாடநெறியைப் பயில்வதற்காக 2024 ஒக்டோபர் மாதத்தில் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்காக பாடநெறியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையை 2025 ஒக்டோபர் மாதம் 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு வருட கால முழுநேரப் பாடநெறியான இப்பாடநெறியானது, 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் ஆராய்ச்சி, வடிவமைப்புப் பயிற்சி மற்றும் சேவை நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

### 1.3.3 ஆற்றல் விருத்தி மற்றும் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் அதுவரை காலமும் காணப்பட்ட உற்பத்திச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிலையங்கள் மாத்திரம் 1989 ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டதோடு தற்போது மாகாணக் கைத்தொழில் திணைக்களங்களின் கீழ் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவு நிலையங்களும் அவ்வுற்பத்திகளை விற்பனை செய்வதற்காக மாகாணத்தினுள்ளே விற்பனை நிலையங்களும் பேணப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, புடவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் துறை மற்றும் கூட்டுறவுத் துறை கைவினைஞர்கள், தொழில்முயற்சியாளர்கள் போன்று மாகாணக் கைத்தொழில் திணைக்களங்களின் கீழ் பணியாற்றும் புடவைக் கைத்தொழில் ஆலோசகர்கள் வரை விரிவடைந்து செல்லும் வகையில், புடவைக் கைத்தொழிலின் தர அபிவிருத்திக்காகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்கமைத்தலும் நடைமுறைப்படுத்தலும் இதன் கீழ் இடம்பெறுகின்றது.

**<u>2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சேவைக்காலப் பயிற்சிப் பாடநெறிகள்</u>**

| தொடர் இலக்கம் | பாடநெறியின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | நடத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட இடம் |
|---|---|---|---|---|---|
| | கெச்காட் வடிவங்கள் | 2025.01.28 | 04 | 15 | கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் சேவை நிறுவனம் |
| | தும்பர மாதரி வடிவங்கள் | 2025.02.05 | 03 | 12 | |
| | இலகு விளையாட்டுப் பொருட்கள் | 2025.03.04 | 04 | 19 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கைத்தறித் துறையின் புதிய போக்குகள் | 2025.03.11 | 02 | 40 | |
| | நெல் மணி நெசவு வடிவங்கள் | 2025.03.18 | 04 | 20 | |
| | கைப்பைகள் வடிவமைப்பு | 2025.03.24 | 05 | 20 | |
| | வண்ணக் கலவை | 2025.04.28 | 03 | 10 | |
| | வூல் துவாய்கள் | 2025.07.15 | 04 | 02 | |
| | துணிகளுக்குச் சாயமிடுதல் | 2025.10.28 | 03 | 12 | |
| | ஆபரணங்கள் தயாரிப்பு | 2025.11.21 | 03 | 05 | |

**<u>கைத்தறிப் புடவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான களப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்</u>**

| தொடர் இலக்கம் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திகதி | பயிற்சி நடத்தப்பட்ட இடம் | பயிற்சியில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | பயிற்சி நடத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | பல்லுச் சேலைகள் | 2025.03.04 | காலி மஹமோதர ரன்சலு நிறுவனம் | 16 | 04 |
| | இயற்கை வர்ணங்கள் பற்றிய பயிற்சி | 2025.03.24 | காலி மஹமோதர ரன்சலு நிறுவனம் | 16 | 05 |
| | லெனோ வடிவமைப்புக்கள் பற்றிய பயிற்சி | 2025.03.10 | ஹம்பாந்தோட்டை ரன்சலு நிறுவனம் | 12 | 04 |
| | இயற்கை வர்ணங்கள் பற்றிய பயிற்சி | 2025.06.02 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - மட்டக்களப்பு | 27 | 05 |
| | கோழிக்கால் நெசவு வடிவமைப்புப் பயிற்சி | 2025.06.02 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - மட்டக்களப்பு | 16 | 05 |
| | இயற்கை வர்ணங்கள் பற்றிய பயிற்சி | 2025.06.11 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - மட்டக்களப்பு | 09 | 05 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வண்ணக் கலவை பற்றிய பயிற்சி | 2025.06.16 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - மட்டக்களப்பு | 18 | 05 |
| | காப்பட் நெசவுப் பயிற்சி | 2025.06.23 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - மட்டக்களப்பு | 25 | 07 |
| | தும்பர மாதிரி வடிவங்கள் பயிற்சி | 2025.07.01 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - மட்டக்களப்பு | 30 | 03 |
| | வண்ணக் கலவை பற்றிய பயிற்சி | 2025.07.07 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - அம்பாறை | 20 | 05 |
| | வண்ணக் கலவை பற்றிய பயிற்சி | 2025.06.14 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - கல்முனை | 12 | 03 |
| | பல்லு நெசவு பற்றிய பயிற்சி | 2025.08.22 | கலல்பிட்டிய புடவைக் கைத்தொழில் கருத்திட்டம் | 10 | 05 |
| | டொபி நெசவுப் பயிற்சி | 2025.09.02 | கிராமியக் கைத்தொழில் திணைக்களம் - அம்பாறை | 25 | 07 |
| | கெச்காட் பயிற்சி | 2025.09.22 | வட மத்திய மாகாணம் | 22 | 04 |
| | இயற்கை வர்ணங்கள் பற்றிய பயிற்சி | 2025.10.07 | வட மத்திய மாகாணம் | 22 | 04 |
| | நெல்மணி நெசவு | 2025.10.27 | வட மத்திய மாகாணம் - அநுராதபுரம் | 21 | 05 |
| | துணிகளுக்கு நிறமூட்டல் | 2025.10.28 | கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் சேவை நிறுவனம் | 12 | 03 |
| | மென் விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி | 2025.11.03 | பிராதேச செயலகம் - கம்பஹா | 18 | 05 |

### 1.3.4 கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையில் தொழில்சார் தகைமைகளை வழங்குதல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு தொழில்சார் தகைமைகளை வழங்கும் நோக்குடன், 17 கைவினைஞர்கள் தேசிய தொழில்சார் தகைமைகள் சட்டகத்தின் கீழ், முற் கற்றல் அங்கீகார (RPL) முறையியலினூடாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு, தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 3 ஆம் மற்றும் 4 ஆம் மட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### 1.3.5 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் ஆடை வடிவமைப்பு பட்டப்படிப்பை பயிலும் மாணவர்களுக்கான துணி நெசவு சார்ந்த செய்முறைப் பயிற்சி மொடியுளுக்கான (Practical Training Modules) நிகழ்ச்சிகளை நடத்துவதும், அதற்கான வளப் பங்களிப்பை வழங்குவதும் இத்திணைக்களத்தின் கீழுள்ள கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் ஆராய்ச்சி, வடிவமைப்புப் பயிற்சி மற்றும் சேவை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் பட்டம்பெற எதிர்பார்த்துள்ள 70 மாணவர்களுக்கு 06 மாத கால செய்முறைப் பயிற்சியை வழங்குவதற்கான வசதிகள் அளிக்கப்பட்டன.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்காக மின்சாரத்தினால் இயங்கக்கூடிய வெற்றிகரமான நூல் சுற்றும் இயந்திரமொன்று (Electric Warping machine), இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் 23 புதிய ஆராய்ச்சித் துணி மாதிரிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிறந்த துணி உற்பத்திகள் கைத்தொழில் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

இயற்கை மூலப்பொருட்களைப் பயன்படுத்தி நூல்களுக்கு நிறமூட்டுதல் (Natural dye for yarn dyeing) மற்றும் பருத்தி, பொலியெஸ்டர் கலப்பு உற்பத்தி மாதிரிகள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை இத்துறைக்கு அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.3.6 பாரம்பரிய அறிவை ஆவணப்படுத்திப் பாதுகாத்தல்

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்குரிய பாரம்பரிய நெசவு முறையியல்களும் தனித்துவமான வடிவமைப்புக்கள் பலவும் காணப்படுவதுடன், புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் அம்முறையியல்களைப் பரீட்சித்துப் பார்த்தல், அறிமுகப்படுத்துதல் மற்றும் ஆவணப்படுத்திப் பாதுகாத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்றுக்கொன்று வேறுபட்ட சுமார் 70 பாரம்பரிய நெசவு முறையியல் மாதிரிகள் தயாரிக்கப்பட்டு, இத்துறையில் ஈடுபட்டுள்ள நபர்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலான கையேடொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

### 1.3.7 கைத்தறிப் புடவைக் கைத்தொழில் சுய தொழில் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்

மிகவும் பயனுள்ளதொரு வாழ்வாதார மார்க்கமாக கைத்தறிப் புடவைக் கைத்தொழிலைக் கிராமிய மட்டத்திலிருந்து விரிவுபடுத்தும் நோக்குடன், புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நாட்டின் பல்வேறு மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்புடைய பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு கைத்தறிப் புடவைக் கைத்தொழில் பற்றிய ஆறு மாத கால பயிற்சியை வழங்கிய பின்னர், இக்கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான கைத்தறி உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்கி, அதன்பின்னர் பயிற்சி பெற்ற பயனாளிகளைக் கைத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற கருத்திட்ட முன்மொழிவுகளிலிருந்து அவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதன் மூலம் 39 சுயதொழிலாளர்கள் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

| தொடர் இலக்கப | கருத்திட்டத்தின் பெயர் | மாவட்டம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கலல்பிட்டிய கருத்திட்டம் (அத்தனகல்ல பி.செ.பிரிவு) | கம்பஹா | 06 |
| 2 | எல்லக்கல கருத்திட்டம் (அத்தனகல்ல பி.செ.பிரிவு.) | கம்பஹா | 03 |
| 3 | பெலபிடியாகொட கருத்திட்டம் (தொடன்கொட பி.செ.பிரிவு) | களுத்துறை | 06 |
| 4 | குருவிட்ட கருத்திட்டம் (குருவிட்ட பி.செ.பிரிவு) | இரத்தினபுரி | 10 |
| 5 | கிதுலம்பிட்டிய கருத்திட்டம் (கடவத்சத்தர பி.செ.பிரிவு) | காலி | 05 |
| 6 | கம்புருபிட்டிய கருத்திட்டம் (கம்புருபிட்டிய பி.செ.பிரிவு) | மாத்தறை | 02 |
| 7 | வதேமட கருத்திட்டம் (உக்குவெல பி.செ.பிரிவு) | மாத்தளை | 05 |
| 8 | சூரியவெவ கருத்திட்டம் (சூரியவெவ பி.செ.பிரிவு) | அம்பாந்தோட்டை | 02 |
| **மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை** | | | **39** |

### 1.3.8 தேசிய கைத்தறிப் புடவைக் கைத்தொழில் ஆடைப் போட்டி, கண்காட்சி மற்றும் விருது வழங்கல் விழாவை நடாத்துதல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழிலின் தரத்தை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளைக் குறிவைத்து, உள்நாட்டு ஆடைகளை வடிவமைக்கும் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் திறன்களை மெருகூட்டல், ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் ஆற்றல்களைப் பாராட்டுதல் என்பவற்றுக்காக வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய கைத்தறி ஆடைப் போட்டியினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியதாக 23 போட்டிப் பிரிவுகளின் கீழ் மாகாணப் போட்டிகள் நடாத்தப்பட்டு, மாகாண மட்டத்திலான வெற்றி பெற்ற வடிவமைப்புக்கள் தேசிய போட்டிக்கு அனுப்பப்பட்டு, அனுபவம் வாய்ந்த நடுவர் குழாமொன்றின் மூலம் தேசிய போட்டிக்கான இறுதி வடிவமைப்புக்களைத் தெரிவு செய்யும் பணிகள் 2025.10.24 அன்று கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் ஆராய்ச்சி, வடிவமைப்புப் பயிற்சி மற்றும் சேவை நிறுவனத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போட்டிக்கு அமைவாக, 2025 திசம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) தேசிய விருது வழங்கும் விழா நடாத்தப்பட்டது.

மேற்படி தேசிய போட்டியில் வெற்றி பெற்ற வடிவமைப்புக்களின் கண்காட்சி 2025 திசம்பர் மாதம் 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடாத்தப்பட்டது.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விற்பனை வாய்ப்புக்களையும் வணிக இணைப்பு வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் 2025 ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் திசம்பர் மாதங்களில் விற்பனைச் சந்தைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் 54 விற்பனைக்கூடங்களுக்காகக் கைத்தறி உற்பத்திப் பொருட்களின் விற்பனை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன், அதன் மூலம் விற்பனையாளர்கள் பெற்ற வருமானம் ரூ.மில்லியன் 7.9 ஆகும். 2025 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் 60 விற்பனைக்கூடங்களுக்காகக் கைத்தறி உற்பத்திப் பொருட்களின் விற்பனை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன், அதன் மூலம் விற்பனையாளர்கள் பெற்ற வருமானம் ரூ.மில்லியன் 12.6 ஆகும். இதன் வழியாக புதிய வணிகத் தொடர்புகளும் உருவாகியுள்ளன.

# 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- தாபனப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் பேணுகைப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- கணக்குப் பிரிவு

## 1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

பின்வரும் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் கீழ் தற்போது இயங்கிவருகின்றன.

ஆராய்ச்சி, பயிற்சி, வடிவமைப்பு மற்றும் சேவைகள் பிரிவு

i. 1/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை. புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிலையங்கள்

ii. புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் புடவைக் கைத்தொழில் பயிற்சி 14 நிலையங்களும், வடிவமைப்பு பயிற்சி நிலையங்களும் இயங்குகின்றன 02

| **தொடர் இலக்கம்** | **நிறுவனம்** | **முகவரி** |
|---|---|---|
| 01 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கடுபெத்த | 280/11/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை |
| 02 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கொட்டல | கொட்டல, வேயங்கொடை |
| 03 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – போயகனே | போயகனே, குருணாகல் |
| 04 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் பின்னவல - | பின்னவல, ரம்புக்கனை |
| 05 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – வடபுளுவ | அருப்பல வீதி, வடபுளுவ, கண்டி |
| 06 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கெடபே | கெடபே, பேராதெணிய |

| | | |
|---|---|---|
| 07 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – மாத்தளை | கொன்கஹமுல, பலாபத்வல, மாத்தளை |
| 08 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – மாத்தறை | ஹக்மன, மாத்தறை |
| 09 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் கிரம - | மித்தெனிய வீதி, கிரம |
| 10 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – பண்டாரவளை | கிணிகம, பண்டாரவளை |
| 11 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் தலாவ - | மிஹிரிகம, தலாவ |
| 12 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் காலி - | கலேகான வீதி, கிங்தொட, காலி |
| 13 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – நல்லூர் | 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் |
| 14 | கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – சம்மாந்துறை | சம்மாந்துறை |
| 15 | உயர் வடிவமைப்பு பயிற்சி நிலையம் – கடுபெத்த | 1/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை |
| 16 | உயர் வடிவமைப்பு பயிற்சி நிலையம் – கெடபே | கெடபே, பேராதெணிய |

# அத்தியாயம் 02 : முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

## 2.1 நிறுவனத்தின் முன்னேற்றம்

2025 ஆம் ஆண்டில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் ஆடை வடிவமைப்பு தொடர்பான பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கான நடைமுறைப் பயிற்சி மொடியுள்களுக்குத் தேவையான வளப்பங்களிப்பை வழங்கி, நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, 70 மாணவர்களுக்கு 06 மாத கால நடைமுறைப் பயிற்சி வழங்கப்பட்டிருப்பதுடன், பட்டதாரிகளைக் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையில் தக்கவைத்துக்கொண்டு, தொழில்முனைவாண்மையை ஊக்குவிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.
திணைக்களத்தினால் மாகாணக் கைத்தொழில் திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் துறைகளில் கைத்தறித் துறையில் ஈடுபட்டுள்ள வினைஞர்களுக்குத் தேவையான மேலதிக பயிற்சிகளாக நெசவு / வடிவமைப்பு / உற்பத்தி அபிவிருத்திப் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டிலிருந்து களப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலம் அதிகளவிலான வினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 2.2 நிறுவனத்தின் எதிர்கால நோக்கு

புடவைக் கைத்தொழில் துறைக்கான 2026-2030 உபாயமார்க்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்கான பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை இற்றைப்படுத்துதல்.

புடவைக் கைத்தொழில் துறையில் பயிற்சி பெற்ற வினைஞர்களின் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

உற்பத்திப் பல்லினப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்திப் பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்கான தொழில்முனைவாண்மை ஊக்குவிப்பு.

கிராமிய மட்டத்தில் கைத்தறிப் புடவைக் கைத்தொழில் சுயதொழில் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்.

ஆராய்ச்சிகள் ஊடாக கைத்தறிப் புடவைக் கைத்தொழில் உபகரணங்கள் மற்றும் பாகங்களை மேம்படுத்துதல்.

இயற்கைச் சாயங்களைப் பயன்படுத்திய கைத்தறித் துணி உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துதல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் உற்பத்திகளின் விற்பனை மற்றும் ஊக்குவிப்புக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழில் துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

## 2.3 சவால்கள்

போதுமான பதவியணி இல்லாமை.

திணைக்களத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில், தொழில்நுட்ப அறிவுடைய பதவிகள் உள்ளடக்கப்படாமை.

போதுமான இடவசதிகளும் இதர வசதிகளும் கொண்ட பணிமனை இல்லாமை.

அங்கீகரிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பதவியணியிலும் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுதல்.

கைத்தறிப் புடவைக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்தல்.

கைத்தறி உற்பத்திகளுக்கான போதிய சந்தை வாய்ப்புகளின் ஒருங்கிணைப்பு குறைவாகக் காணப்படுதல்.

கைத்தறித் துணிவகை உற்பத்திகளுக்குப் பெறுமதி சேர்ப்பு செய்யப்படாமை மற்றும் வெளிநாட்டுச் சந்தை இலக்காகக் கொள்ளப்படாமை.

## 2.4 நிறுவனத் தலைவரின் கையொப்பம்



பெயர்: யூ.வீ.எஸ்.சேனானி செனெவிரத்ன

பதவி: புடவைக் கைத்தொழில் பணிப்பாளர்

# அத்தியாயம் 03: ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

## 3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை

| வரவு செலவு (நடப்பு வருடம்) | | குறிப்பு | உண்மையான | | |
|---|---|---|---|---|---|
| | | | நடப்பு வருடம் ரூ.ச | | கடந்த வருடம் ரூ.ச |
| - | **வருமான வரவுகள்** | | - | | - |
| - | வருமான வரி | 1 | - | | - |
| - | உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 2 | - | | - |
| - | சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள் | 3 | - | | - |
| - | வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனையவை | 4 | - | | - |
| - | **மொத்த வருமான வரவுகள் (அ)** | | - | | - |
| - | **வருமானம் அல்லாத வரவுகள்** | | - | | - |
| - | திறைசேரி கட்டுநிதி | | 166,320,000.00 | | 150,484,000.00 |
| - | வைப்புகள் | | 2,104,872.00 | | 7,665,988.00 |
| - | முற்பணக் கணக்குகள் | | 7,383,368.00 | | 8,450,935.00 |
| - | பிற பிரதான பேரேட்டுக் கணக்கு வரவுகள் | | - | | - |
| - | **மொத்த வருமானம் அல்லாத வரவுகள் (ஆ)** | | **175,808,240.00** | | **166,600,923.00** |
| - | **மொத்த வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் இ = (அ) + (ஆ)** | | **175,808,240.00** | | **166,600,923.00** |
| - | **திறைசேரிக்கான பண அனுப்பல்கள் (ஈ)** | | **177,512.00** | | **-** |
| - | **நிகர வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் உ =** | | **175,630,728.00** | | **166,600,923.00** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **(இ) – (ஈ)** | | | | |
| - | **கழிக்கப்பட்டது: செலவுகள்** | | - | | - |
| - | **மீண்டெழும் செலவுகள்** | | - | | - |
| 103,600,000.00 | வேதனங்கள், சம்பளம் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள் | 5 | 102,382,979.00 | | 82,364,725.00 |
| 30,400,000.00 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 25,512,933.00 | | 24,285,964.00 |
| 226,300,000.00 | நிவாரணங்கள், சலுகைகள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 203,904,773.00 | | 208,334,646.00 |
| - | வட்டி செலுத்துதல்கள் | 8 | - | | - |
| - | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 9 | - | | - |
| **360,300,000.00** | **மொத்த மீண்டெழும் செலவுகள் (ஊ)** | | **331,800,685.00** | | **314,985,335.00** |
| | **மூலதன செலவுகள்** | | | | |
| 27,500,000.00 | மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு | 10 | 25,673,308.00 | | 11,395,349.00 |
| 200,000.00 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல் | 11 | 196,619.00 | | 239,989.00 |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | | - |
| - | நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல் | 13 | - | | - |
| - | ஆற்றல் விருத்தி | 14 | - | | - |
| 40,000,000.00 | ஏனைய மூலதனச் செலவுகள் | 15 | 39,557,506.00 | | 40,990,810.00 |
| **67,700,000.00** | **மொத்த மூலதனச் செலவுகள் (எ)** | | **65,427,434.00** | | **52,626,148.00** |
| | **வைப்புத்தொகை செலுத்தல்** | | 2,406,799.00 | | 7,454,760.00 |
| | **முற்பணம் செலுத்தல்** | | 8,671,286.00 | | 6,484,727.00 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு செலுத்தல்** | | - | | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரதான பேரேட்டு செலவுகள் (ஏ) | | 11,078,085.00 | | 13,939,487.00 |
| 428,000,000.00 | மொத்தச் செலவு ஐ = (ஊ + எ + ஏ) | | 408,306,204.00 | | 381,550,971.00 |
| | டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி நிலுவை ஒ = (உ-ஐ) | | (232,675,476.00 ) | | (214,950,048.00 ) |
| | கட்டுநிதி இணக்க அறிக்கையின்படி நிலுவை | | (232,675,476.00 ) | | (214,950,048.00 ) |
| | டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி நிலுவை | | - | | - |

## 3.2 நிதி நிலை அறிக்கை

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 246,692,135.63 | 246,495,516.00 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 18,488,811.97 | 17,200,894.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **265,180,947.60** | **263,696,410.00** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 18,218,411.97 | 16,628,567.00 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 246,692,135.63 | 246,495,516.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 270,400.00 | 572,327.00 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **265,180,947.60** | **263,696,410.00** |

பக்க இலக்கம் 7 முதல் 25 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 26 முதல் 33 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 2026/02/26 | திகதி : 24/02/2026 | திகதி : 26/02/24 |
| J.M. Thilaka Jayasundara<br>Secretary<br>Ministry of Industry and Entrepreneurship Development<br>73/1, Galle Road, Colombo 03. | U.V.S. Senani Seneviratne<br>Director<br>Department of Textile Industry<br>3rd Floor, Secretariat Building,<br>Maligawatta, Colombo 10. | S. M. S. K. Siriwardana<br>Accountant<br>Department of Textile Industry<br>3rd Floor, Secratiat Building,<br>Maligawatta, Colombo 10 |

2

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மையான | |
|---|---|---|
| | **நடப்பு வருடம் ரூ.ச.** | **கடந்த வருடம் ரூ.ச.** |
| <u>தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்</u> | | |
| மொத்த வரி வரவுகள் | - | - |
| கட்டணங்கள், மிகைகள், தண்டப் பணம், மற்றும் உரிமங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத வரவுகள் | - | - |
| ஏனைய வருமானத் தலைப்புகளின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானம் | 11,154,500.00 | 8,237,986,.00 |
| கட்டுநிதி வரவுகள் | 166,320,000.00 | 150,484,000.00 |
| முற்பண அறவிடல் | 4,807,814.00 | 4,894,015.00 |
| வைப்பு வரவுகள் | 2,104,872.00 | 7,665,988.00 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மொத்த காசுப் பாய்ச்சல்கள்(அ) | **184,387,185.00** | **171,281,989.00** |
| <u>கழிக்கப்பட்டது-பணச் செலவுகள்:</u> | | |
| பணியாளர்களின் சம்பளம் மற்றும் தொழிற்பாட்டு செலவுகள் | 101,916,604.00 | 106,305,189.00 |
| நிவாரணங்கள் மற்றும் மாற்றல்கள் | 211,273.00 | 1,025,923.00 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 25,512,933.00 | |
| மூலதனச் சொத்துக்களைப் புனரமைப்பு செய்தலும் மேம்படுத்தலும், மூலதன மாற்றல்கள், ஆற்றல் விருத்தி மற்றும் ஏனைய மூலதனச் செலவினங்கள் | 42,926,188.00 | |
| ஏனைய செலவுத் தலைப்புகளுக்காக உறப்பட்ட செலவுகள் | 6,166,763.00 | 9,129,576.00 |
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 177,512.00 | 229,000.00 |
| முற்பணம் செலுத்துதல் | 4,872,492.00 | 4,711,022.00 |
| வைப்புத்தொகை செலுத்துதல் | 2,406,799.00 | 7,454,760.00 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ) | **184,190,566.00** | **128,855,470.00** |

| | | |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | 196,619.00 | 42,426,519.00 |
| முதலீட்டு நடவடிக்கைகளால் கிடைத்த காசுப் பாய்ச்சல்கள் | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| உரித்து நீங்கும் ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| முற்பண அறவீடு | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் (ஈ) | | - |
| கழிக்கப்பட்டது-பணச் செலவு; | | |
| மூலதன செலவு | 196,619.00 | 42,655,519.00 |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ) | 196,619.00 | 42,655,519.00 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (196,619.00) | (42,655,519.00) |
| தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | - | (229,000.00) |
| நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப்பாய்ச்சல் | | |
| உள்நாட்டுக் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| கொடை வரவுகள் | - | - |
| வைப்பு வரவுகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ) | - | - |
| கழிக்கப்பட்டது-பணச் செலவு; | | |
| உள்நாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல் | - | - |
| நிதி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஐ) | - | - |
| நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் (ஒ)=(எ)-(ஐ | - | - |
| நிதியின் நிகர மாற்றங்கள் (ஓ)=(எ)-(ஒ) | | (229,000.00) |

| | | |
|---|---|---|
| ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப நிலுவை | - | 229,000.00 |
| டிசம்பர் 31 ஆம் திகதியில் இறுதி நிலுவை | - | - |

### 3.4 நிதிக் ஐற்றுக்களுக்கான குறிப்பூகள்

**1) அறிக்கையிடல் காலப்பகுதி**

2025 சனவரி 01தோடக்கம் ளெசம்பர் 31ஆம் திகதி வரையிலான காணப்பகுதி இந்த நிதிக்ஐற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைகின்றது,

**2) அளவீட்ன் அபெ்படை**

நிதிக் ஐற்றுக்கள் வரலாற்றுக் கிரய அபெ்படையில் தயாரிக்கப்பட்டுள்ளசூதாடு சில சோத்துக்களுக்கான வரலாற்றுக் கிரயமானது மீள் மதிப்பீடு சேய்யப்பட்ட பேறுமதிக்கு முன்சூனற்றப்பட்டுள்ளது, சூவறுவகையில் காட்டப்படாதுள்ளசூபாது கணக்குத் தயாரிப்பூகள் சூமம்படுத்தப்பட்ட அபெ்படையில் சூமற்கோள்ளப்படுகின்றன,
நிதிக் ஐற்றுக்களானவை இலஙு்கை நாணயத்தில் அண்மித்த :பாகூக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன,

**3) வருமானம் இனஙு்காணப்படுதல்**

பரிமற்று மற்றும் பரிமாற்று அல்லாத வருமானஙு்கள் அவை கிடைக்கப்பட சூவண்யெ கால எல்லைகளைப் பூறக்கணித்து பணம் கிடைக்கப்படும் காணப்பகுதியில் வருமானமாக இனஙு்காணப்படுகின்றன,

**4) ஆதனம்? போறி மற்றும் உபகரணஙு்களை இனஙு்காணுதல் மற்றும் அளவிடுதல்**

சோத்தின் எதிர்கால போருளாதார அனுஜலஙு்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கும் என்பதற்கான உறுதிப்பாடு காணப்படுகின்றசூபாது மற்றும் அச்சோத்துக்களை நம்பகமான முறையில் அளவிட முறுெமாக இருக்குமாயின் அச்சோத்துக்கள் ஆதனம்? போறி மற்றும் உபகரணஙு்களாக இனஙு்காணப்படும்,
ஆதனம்? போறி மற்றும் உபகரணஙு்கள் என்பன கிரயத்தில் இனஙு்காணப்படுவசூதாடு கிரய மாதிரி ஏற்பூடையதாக அமையாத சந்தர்ப்பஙு்களில் மீள் மதிப்பீடு சேய்யப்பட்ட பேறுமதி பயன்படுத்தப்படும்,

**5) ஆதனம்? போறி மற்றும் உபகரணஙு்களுக்கான ஒதுக்கம்**

இந்த ஒதுக்கக் கணக்கு ஆனது ஆதனம்? போறி மற்றும் உபகரணஙு்களின் ஒத்த கணக்காகும்,

**காசும் காசுக்குச் சமமானவைகளும்**

2025 ளெசம்பர் 31ஆம் திகதியில் கையிருப்பூ உள்நாட்டு பூடிக்க நாணயத் தாள்கள் மற்றும் நாணயஙு்கள் என்பன காசும் காசுக்குச் சமமானவைகளுமாகும்,

## 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | வசூலித்த வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு (ரூ.) | இறுதி வருமான மதிப்பீட்டின் % மாக |
| 2002.01.00<br>2002.01.01 | **வாடகை**<br>அரச கட்டிடங்களின் வாடகை | 800,000.00 | 800,000.00 | 1,015,742.58 | 127% |
| 2002.02.99 | **வட்டி - ஏனையவை** | 750,000.00 | 750,000.00 | 710,197.95 | 95% |
| 2003.99.00 | **ஏனைய வரவுகள்** | 900,000.00 | 900,000.00 | 4,153,076.32 | 461% |
| 2004.01.00<br>2004.01.00 | **சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள்**<br>மத்திய அரசாங்கம் | 3,300,000.00 | 3,300,000.00 | 5,275,482.95 | 159% |

## 3.6 மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, இறுதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 343,000,000.00 | 360,300,000.00 | 331,800,686.00 | 92% |
| மூலதன | 67,700,000.00 | 67,700,000.00 | 65,427,434.00 | 97% |

## 3.7 நிபி.208 இன்படி, ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்திற்கு/மாவட்ட செயலகத்திற்கு/மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

| தொ. இ | ஒதுக்கீடுகள் கிடைத்த அமைச்சு/திணைக் களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு ரூ. | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் ,வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் %மாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடுகள் ரூ. | இறுதி ஒதுக்கீடுகள் ரூ. | | |
| 149 | கைத்தொழில் அமைச்சு | ரன்சலு கைவினைப் பொருட் காட்சி | 6,022,500.00 | 6,022,500.00 | 6,022,500.00 | 100% |
| 253 | தேர்தல்கள் திணைக்களம் | தேர்தல் கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் | 198,126.99 | 198,126.99 | 171,195.00 | 86% |

## 3.8 நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையிடலுக்கான செயலாற்றுகை

| சொத்துக்களின் குறியீடு | குறியீட்டின் விபரம் | 2024.12.31ஆம் திகதியில் பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை | 2024.12.31 ஆம் திகதியில் நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் நிலுவை | எதிர்காலத் தில் கணக்கிட ப்படவுள்ள | முன்னேற்ற ம் % மாக அறிக்கையி டப் படுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 118,816,125.00 | 118,816,125.00 | - | - |
| 9152 2.1 | வாகனங்கள் | 17,350,000.00 | 17,350,000.00 | - | - |
| 9152 2.2 | இயந்திர சாதனங்கள் | 24,364,160.63 | 24,364,160.63 | - | - |
| 9153 | காணிகள் | 86,161,850.00 | 86,161,850.00 | - | - |

## 3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இலக்கம்: IMT/D/DTI/2025/51 திகதி: 2026 மே 20

பணிப்பாளர்

புடவைக் கைத்தொழில் திணைக்களம்.

**தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2025 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை**

------------------------------------------------------------------------------------------------------------------------

1. **நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2025 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் (திருத்தப்பட்ட) பிரகாரம்

பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் முன்வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2025 டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் நிதிநிலைமை, நிதி செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதன் அடிப்படைக்கு அமைவாக அனைத்து பொருண்மையான தன்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 விடயம் ஒன்றை வலியுறுத்துதல் - நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதன் அடிப்படை

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 1 இன் மீது கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நிதிக்கூற்றுக்கள் ஆனவை அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் 150, 151 மற்றும் 2025 பிப்ரவரி மாதம் 17 ஆம் திகதிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய வழிகாட்டல் இலக்கம் 02/2025 இன் படி புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக அமையலாம். எனது அறிக்கை புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினதும் திறைசேரியினதும் இலங்கைப் பாராளுமன்றதினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட மாட்டாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் 150, 151 மற்றும் 2025 பிப்ரவரி மாதம் 17 ஆம் திகதிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய வழிகாட்டல் இலக்கம் 02/2025 இற்கு அமைவாக அனைத்து பொருண்மையான தன்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமை வெளிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தேவைப்படும் உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு திணைக்களமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

